பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

28 02 2026 SATURDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, ராஜஸ்தான் மற்றும் குஜராத்தில் இன்று பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

2. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துக் கட்டமைப்புகளை வலுப்படுத்த மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

3. கனடா பிரதமர் திரு. மார்க் கார்னியின் இந்திய பயணம் இருநாடுகளுக்கு இடையிலான நல்லுறவை வலுப்படுத்தும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. ஆப்கானிஸ்தானுடன் நேரடி போர் தொடங்கி இருப்பதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளதை அடுத்து, இருநாடுகளின் எல்லைப் பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

5. ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் ஜாம்ஷெட்பூர் அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு நரேந்திர மோடி, ராஜஸ்தான் மற்றும் குஜராத்தில் இன்று பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

இன்று காலை ராஜஸ்தான் மாநிலம், அஜ்மீர் செல்லும் அவர், 16 ஆயிரத்து 680 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கிறார்.

ராஜஸ்தானுடன், பஞ்சாப், தில்லி உள்ளிட்ட பகுதிகளுக்கான இணைப்பை மேம்படத்தும் சாலை போக்குவரத்து திட்டங்களை அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

நான்கு முக்கிய குடிநீர் திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், மின்உற்பத்தி திட்டம் ஒன்றை அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

மின்விநியோக இணைப்பை வலுப்படுத்தும் இரண்டு திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

ராஜஸ்தான் மாநில அரசு பணிகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 21 ஆயிரத்து 800 இளைஞர்களுக்கு இந்நிகழ்ச்சியில் பிரதமர் பணிநியமன கடிதங்களை வழங்கவுள்ளார்.

பின்னர், இன்று மாலை குஜராத் செல்லும் திரு. நரேந்திர மோடி, அங்கு, செமிகண்டக்டர் உற்பத்தி தொடர்பான தனியார் நிறுவனத்தை தொடங்கி வைக்கிறார்.

5 லட்சம் சதுரஅடி பரப்பளவில் 22 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் இந்த நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் தொடங்கப்படுவதன் மூலம், செமிகண்டக்டர் துறையில் வர்த்தக ரீதியிலான உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி அதிகரிக்கும் என்று அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இரண்டுநாள் பயணமாக இன்று கேரளா செல்கிறார்.

சங்கனாச்சேரியில் இன்று நடைபெறவுள்ள புனித Perchamans கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு விழாவில அவர் பங்கேற்கவுள்ளார்.

நாளை, திருச்சூர் மற்றும் திருவனந்தபுரத்தில் கல்வி நிறுவனங்களில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

>>>>>><<<<<<

பீகாரில், நேபாள எல்லைப்பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில். கண்காணிப்பை தீவிரப்படுத்துமாறு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்திய - நேபாள எல்லையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம், பாட்னாவில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய அவர், சட்டவிரோத கட்டுமானங்கள், ஊடுருவல்கள், போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றை தடுக்க ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியம் என்றார்.

மக்கள் வசிக்காத வனப்பகுதிகளில் கண்காணிப்பை அதிகரிக்குமாறும், அதிகாரிகளுக்கு திரு. அமித் ஷா அறிவுறுத்தினார்.

>>>>>><<<<<<

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துக் கட்டமைப்புகளை வலுப்படுத்த மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. Sarbananda Sonowal கூறியுள்ளார்.

திப்ருகரில் உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து தொடர்பான 3 உள்கட்டமைப்பு திட்டங்களை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

கடந்த 11 ஆண்டுகளில் நாடுமுழுவதும் உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து தொடர்பாக ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வளர்ச்சியுடன், பாரம்பரியம் என்ற நோக்கத்தில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும், கலாச்சார அடையாளங்களை இழக்காமல் வளர்ச்சியை உறுதி செய்வதே இதன் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள உள்நாட்டு நீர்வழி கட்டமைப்புகள், வடகிழக்கு மாநிலங்களில் பயணிகள் போக்குவரத்து, வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்தும் என்று திரு. Sarbananda Sonowal கூறினார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த மற்றும் வலுவான தேசத்தை கட்டமைக்கும் பணியில், இளைஞர்களின் பங்கு முக்கியமானது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், இந்தூரில் கல்வி நிறுவனம் ஒன்றின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், புதிய இந்தியாவை வழிநடத்துவதில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு முக்கியப் பங்கு உள்ளது என்றார்.

கல்வியுடன் புதிய தொழில்நுட்பங்களை உடனுக்குடன் அறிந்து நடைமுறைக்கு ஏற்ற வகையில் அவற்றை பயன்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

பல்வேறு நாடுகளில் இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில், இந்தியாவில் இளைஞர்கள் சக்தி அதிகம் இருப்பது, நாட்டிற்கு மிகப் பெரிய பலம் என்று திரு, ஓம் பிர்லா கூறினார்.

>>>>>><<<<<<

பௌத்த பாரம்பரியத்தை மேம்படுத்த உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

தேசிய சிறுபான்மையினர் நல ஆணையம் புதுதில்லியில் ஏற்பாடு செய்திருந்த பௌத்த கருத்தரங்கில் பேசிய அவர், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற நோக்கத்துடன் சிறுபான்மையின சமூகங்களின் வளர்ச்சிக்கு அரசு முக்கியத்துவம் அளித்து செயல்படுவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய சிறுபான்மையினர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன், நாடுமுழுவதும் உள்ள பௌத்த கலாச்சார அடையாளங்களை பாதுகாக்கவும், பௌத்தர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் கல்வி மேம்பாட்டிற்காகவும் மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பட்டியலிட்டார்.

>>>>>><<<<<<

கனடா பிரதமர் திரு. *Mark Carne* நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக நேற்று மும்பை வந்தடைந்தார்.

விமான நிலையத்தில் மஹாராஷ்ட்டிர மாநில அமைச்சர் திரு. ஜெயக்குமார் ராவல் அவரை வரவேற்றார்.

மும்பையில் இன்று நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் திரு. *Mark Carne* பங்கேற்கவுள்ளார்.

நாளை புதுதில்லி செல்லும் அவர். நாளை மறுநாள் பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொள்ளவுள்ளார்.

கனடா பிரதமரின் இந்திய பயணம் இருநாடுகளுக்கு இடையிலான நல்லுறவை வலுப்படுத்தும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இருநாடுகளும் வலுவான ஜனநாயகத்தையும், மக்களுக்கு இடையிலான நட்புறவையும் கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

பிரதமரின் சூரிய மின்சக்தி திட்டத்தின் மூலம், சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படுவதடன் மின்கட்டண செலவுகள் குறையும் என்று மத்திய மின்துறை இணையமைச்சர் திரு. ஶ்ரீபத் நாயக் கூறியுள்ளார்.

திரிபுராவில் அகர்தலா மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சூரிய மின்சக்தி உற்பத்திக்கான கட்டமைப்புகளை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

அரசு அலுவலகங்களில் சூரியசக்தி உற்பத்தியை ஊக்குவிக்கும் திரிபுரா அரசின் முயற்சிகளை அவர் பாராட்டினார்.

உபரி மின்சாரத்தை விற்பனை செய்வதன் மூலம், இத்திட்டத்தின் மூலம் வருவாய் ஈட்டவும் வாய்ப்புகள் உள்ளதாக திரு. ஶ்ரீபத் நாயக் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சத்திஷ்கரில், சரணடையும் நக்ஸலைட்டுகளின் மறுவாழ்விற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு மேற்கொள்ளும் என்று முதலமைச்சர் திரு. விஷ்ணு தியோ சாய் கூறியுள்ளார்.

அண்மையில் சரணடைந்த 120 நக்ஸலைட்டுகள், ராய்ப்பூரில் சட்டப்பேரவை நடவடிக்கைகளை நேற்று பார்வையிட்டனர்.

பின்னர் அவர்களுடன் கலந்துரையாடிய முதலமைச்சர், வன்முறையை கைவிட்டு, ஜனநாயகப் பாதைக்கு திரும்புவது தேசத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் என்று கூறினார்.

>>>>>><<<<<<

உத்தரபிரதேசத்தில் அங்கன்வாடி மையங்கள் அனைத்தும் சொந்த கட்டிடங்களில் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

மாநிலத்தில் ஒரு லட்சத்து 89 ஆயிரம் அங்கன்வாடி மையங்கள் உள்ளதாகவும், அவற்றில் 75 ஆயிரம் மையங்களுக்கு சொந்தக் கட்டிடம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காக மாநில அரசு முக்கியத்துவம் அளித்து செயல்படுவதாக திரு. யோகி ஆதித்யநாத் கூறினார்.

>>>>>><<<<<<

ஆப்கானிஸ்தானுடன் நேரடி போர் தொடங்கி இருப்பதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளதை அடுத்து, இருநாடுகளின் எல்லைப் பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

பாகிஸ்தான் நடத்திய தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஆப்கானிஸ்தானும் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானின், ஹைபர் பக்துன்வா பகுதியில் உள்ள ராணுவத் தளத்தின் மீது ஆப்கானிஸ்தான் தாக்குதல் நடத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

Jamrut, Abodabad உள்ளிட்ட இடங்களில் உள்ள பாகிஸ்தான் ராணுவ தளங்கள் மீதும், ஆப்கானிஸ்தான் தாக்குதல் நடத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

4 மணி நேரம் நடைபெற்ற மோதலில் பாகிஸ்தான் ராணுவத்தைச் சேர்ந்த 55 பேர் கொல்லப்பட்டதாக ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலின் போது, ஆப்கானிஸ்தான் தரப்பில் 13 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தாக்குதலில் தாலிபான் போராளிகள் 133 பேர் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் கூறியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் பதற்றத்தை தணிக்க, தூதரக ரீதியில் பேச்சுவார்த்தைகள் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அண்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

பதற்றத்தை தணிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ரஷ்யா மற்றும் ஈரான் நாடுகளும் வலியுறுத்தியுள்ளன.

*புனித ரமலான் மாதத்தில் ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உயிரிழப்புகளை ஏற்படுத்தும் வகையில் பாகிஸ்தான் நடத்திய தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.*

***>>>>>><<<<<<<***

*ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் ஜாம்ஷெட்பூர் அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.*

*கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அந்த அணி 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.*

*பெங்களூருவில் நேற்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் பஞ்சாப் அணி 2-0 என்ற கோல்கணக்கில் பெங்களூரு அணியை வென்றது.*

***>>>>>>END<<<<<<<***